**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 14.11.2025

அசல் வழக்கு எண். 244/2024

வா.சா. 2 சக்திவேல், த/பெ. கண்ணாயிரம்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க உங்களுக்கு அழைப்பானை வந்ததா என்றால் வரவில்லை. யார் சொல்லி நீதிமன்றத்திற்கு வந்தீர்கள் என்றால் வழக்கறிஞர் சொன்னதால் வந்தேன். எந்த வழக்கறிஞர் என்றால் மாணிக்கவாசகம் ஆவார். எங்கு பார்த்தீர்கள் என்றால் அவர் அலுவலகத்திற்கு சென்று பார்த்தேன். எப்பொழுது பார்த்தீர்கள் என்றால் ஒரு வாரத்திற்கு முன்பாக சென்று பார்த்தேன். உங்களை வழக்கறிஞர் அலுவலகத்திற்கு ரகுநந்தன் அழைத்துச்சென்றார் அவர் போட்ட வழக்கு சாட்சி சொல்ல அழைத்துச் சென்றார் என்றால் சரிதான்.வழக்கு பற்றி வழக்கறிஞர் சொன்னாரா அல்லது ரகுநந்தன் சொன்னாரா என்றால் வழக்கறிஞர் தான் சொன்னார். வழக்கறிஞர் அலுவலகத்தில் பிரமாண பத்திரத்திம் கையெப்பம் போட்டீர்கள் என்றால் சரிதான். தேதி தெரியுமா என்றால் போனவாரம் போட்டேன். ரகுநந்தன் வீட்டில் தச்சு தொழில் செய்வதாக சொல்கிறீர்கள் அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக வாக்குமூலத்தில் எந்த தேதி குறிப்பிட்டு உள்ளீர்கள் என்றால் ஏப்ரல் 25 என்று குறிப்பிட்டுள்ளேன். 2025 ஆம் ஆண்டு ஆகும். அதற்கு முன்பாக வாதிக்கும் பிரதிவாதிக்கும் பிரச்சினை இல்லை என்றால் இல்லை. காவல் நிலையம் சென்றதாக வழக்கில் சொல்லி உள்ளீர்கள் நீங்களும் காவல் நிலையம் சென்றீர்களா என்றால் சொல்லவில்லை. போலீசார் வழக்கு

சொத்தில் வந்து பார்த்து விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். உங்களை விசாரித்தார்களா என்றால் என்னை விசாரிக்கவில்லை. வாக்கு மூலத்தில் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியில்லை. வழக்கு சொத்தில் முன் பக்கம் நீங்கள் வாடகைக்கு இருப்பதாக சொல்கிறீர்கள் அந்த வீட்டில் யார் யாரெல்லாம் வாடகைக்கு இருக்கிறார்கள் என்றால் நான்கு பேர் இருக்கிறார்கள் அவர்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நீங்கள் குடியிருக்கும் வீட்டு ஓனருக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் சொன்னவாறு வழக்கில் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram